DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.

| | | |
|---|---|---|
| Calendar | .. .. | **CC. 31/2020** |
| | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| | .. .. | |
| Deposition of Witness for | | PW 2<br>Prosecution<br>Court |

| | | | |
|---|---|---|---|
| Father/Husband Name | : த.பெ நாகரத்தினம் | Calling | : காவல் ஆய்வாளர் (ஒய்வு) |
| Village | : சேலம் | | : |
| Taluk | : சேலம் | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16.02.2026

**எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**

துவக்க நேரம்

1) நான் தற்சமயம் விழுப்புரம் வணிக குற்ற புலனாய்வு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020 ம் ஆண்டு ஏத்தாப்பூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன்.

2) 13.03.2020 அன்று நடந்த சாலை விபத்து சம்மந்தமாக சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சின்னதுரை அவர்கள் ஏத்தாப்பூர் காவல் நிலைய குற்ற எண்.94/2020 ன் கீழ் இதச பிரிவுகள் 279, 304(A) ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து மேல் விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்தார்.

3) அதனை பெற்று நான் 14.03.2020 அன்று சம்பவ இடம் சென்று சாட்சிகள் குமார், கலியன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4** ஆகும்.

4) மேற்படி சாட்சிகளை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு அன்றே ஆத்துர் அரசு மருத்துவமனைக்கு சென்று விபத்தில் இறந்த துள்ளான் என்பவரின் பிரேதத்தை அடிடையாளம் கண்டு சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ 5** ஆகும்.

5) பிரேதத்தை முதன்நிலைக் காவலர் சசிக்குமார் என்பவர் வசம் ஒப்படைத்து

வேண்டுகோள் கடிதத்தை மருத்துவரிடத்தில்ஒப்படைக்க உத்தரவிட்டேன். பின்னர் சாட்சிகள் பெரியசாமி, தமிழ்செல்வன், சர்குணன், அருள், கலையரசன், குமார், கலியன் ஆகியார்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அலுவல் சாட்சிகளை தனிதனியாக விசாரித்து பதிவு செய்தேன்.

6) எதிரியை கடந்த 17.03.2020 அன்று காவல் நிலையத்திற்கு முன்பு கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். பிறகு 20.07.2020 அன்று விபத்தில் தொடர்புடைய இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். மோட்டார் ஆய்வாளரை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். **அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ 6 ஆகும்**.

7) பின்பு வழக்கின் கோவிந்தனின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சங்கீதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன். **பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.7 ஆகும்.** பின்னர் சாட்சி சான்றாவணங்களை அடிப்டையில் சம்பவம் உண்மை என தெரியவர எதிரி மீது மேற்கண்ட சட்டபிரிவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) சம்பவ இடத்தை 14.03.2020 அன்று காலை 6 மணிக்கு பார்வையிட்டேன். சம்பவ இடத்தை யார் அடையாளம் காட்டினார் என்றால் பெரியசாமி என்பவர் அடையாளம் காட்டினார்.

2) சம்பவ இடத்திற்கும் பேருந்து நிறுத்தற்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 2 பல்லாங்கு தூரம் இருக்கும். இரண்டு பல்லாங்கு என்பவது நடந்து செல்லும் தூரம் ஆகும். சம்பவ இடத்திற்கும் மளிகை கடைக்கும் 20 அடி தூரம் இருக்கும். சம்பவ நேரம் இருட்டு என்றால் சரிதான்.

3) சம்பவ இடத்தில் அடிப்பட்ட நபர் 75 வயதிற்கு மேற்பட்டவர் என்றால் சரிதான். விபத்தில் அடிப்பட்ட நபர் சைக்கிளை தள்ளிக்கொண்டு வந்தார் என்றால் சரிதான். பேருந்து நிறுத்ததிற்கும் வேகதடைக்கும் எவ்வளவு தூரம் என்றால் வேகத்தடை அங்கு இருப்பதாக வரைபடத்தில் இல்லை.

4) வழக்கின் எதிரியால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்து எதிரியால் ஏற்படவில்லை என்றாலும் விபத்தில் அடிப்பட்ட நபர் கவனக்குறைவால் வந்த இந்த விபத்து ஏற்படுத்தியுள்ளார் என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பவந்தமில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் முறையாக புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றாலும், இந்த வழக்கை முறையாக புலன்விசாரணை செய்திருந்தால் இந்த வழக்கை கைவிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த

வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. முறையாக விசாரணை செய்யப்பட்டிருந்தால் இறந்துபோனவர் வயது 60 என்று தாக்கல் செய்திருக்கமாட்டேன் என்றால் சரியல்ல. பேருந்து நிறுத்ததிடம் வேகத்தடை உள்ளது என்றாலும் அதை மறைத்து மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

முடிவு நேரம்

Taken Down by me in Open Court Read over to the Dependant in the presence of the accused and admitted by the Dependant to be correct

ANIS FATHIMA

Digitally signed by ANIS FATHIMA
Date: 2026.02.16 16:35:17 +0530

Judicial Magistrate No.1,
Attur.